மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்

E.A.No.5/2024
in
E.P.4/2012
in
O.S.403/1988

2024-ம் ஆண்டு ஜுன் மாதம் 06-ஆம் நாள் ம.சா.1 சாட்சி என் முன் சாட்சியாக விசாரிக்கப்பட்டார், 1983-ம் ஆண்டு 54-வது சட்டப்பிரிவு 6(2) ஏற்பாட்டின் படி திருமதி.P.சர்மிளா., பி.பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :திரு.துரைசாமி | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலூக்கா | : | தொழில் | : |

முதல் விசாரணை

ம.சா. 1 ஆகிய நான் நிறைவேற்றுமனுவின் 3-ம் நபர். என் தரப்பு முதல் விசாரணை ஆணை உறுதி நிருபணமாகிய வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். 07.10.2021-ம் தேதியிட்ட குத்தகை ஒப்பந்த பத்திரத்தின் அசல் **ம.சா.ஆ.1** ஆகவும், 15.07.2023-ம் தேதியில் உரம் வாங்கிய இரசீது அசல் **ம.சா.ஆ.2** ஆகவும், வாழை விற்பனை செய்த இரசீதுகள் அசல் (எண்ணிக்கை6) **ம.சா.ஆ.3** ஆகவும், JCB பில் இரசீதுகள் (எண்ணிக்கை 3) அசல் **ம.சா.ஆ.4** ஆகவும், கரும்பு விற்பனை இரசீதுகள் (எண்ணிக்கை 10) **ம.சா.ஆ.5** ஆகவும் (மேற்படி **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5** ஆவணமானது வழக்கு தீர்ப்புக்கு பின்னிட்டு உருவாக்கப்பட்ட ஆவணம் என்பதால் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று தீர்ப்பாணை பெற்றவர் ஆட்சேபணையின் அடிப்படையில் குறியீடு செய்யப்படுகிறது) தாவாச் சொத்தினை குத்தகை ஒப்பந்த பத்திரப்படி நான் அனுபவித்து வருவதால் என்னை தாவா சொத்தில் இருந்த வெளியேற்றக்கூடாது என்று தடை உத்திரவு செய்ய நான் வணக்கமாய் வேண்டுகிறேன்.

<u>2 முதல் 5ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கோணமூலையில் குத்தகைக்கு ஓட்டி வரும் அம்பிநாய்க்கர் தோட்டத்தில் வசித்து வருகிறேன். எனக்கு ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையா அட்டை போன்ற ஆவணங்கள் உள்ளது. மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

<u>2 முதல் 5ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது குறுக்குவிசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>

06.06.2024 அ.வ.எண்.244/2015 பி.வா.சா.3

<u>பெயர்.திரு.மோகன்</u>

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

1. வழக்கில் எதிர்வழக்குரை யார் தாக்கல் செய்தார்கள் என்றால், நாங்கள் தான் தாக்கல் செய்தோம். எனது மனைவியான மலர்விழி தான் தாக்கல் செய்தார் மற்ற தரப்பினர்களான 5 நபர்களுடன் சேர்ந்துதான் தாக்கல் செய்தார். பி.டி.வரதைய்யன், பி.டி.நஞ்சையகவுடர், ரத்தினம், பாபு மற்றும் எனது மனைவி தாக்கல் செய்தார்கள். சிவகுமார் பிறகுதான் வழக்கில் சேர்க்கப்பட்டார். எனது மனைவி இவ்வழக்கில் 7ம் பிரதிவாதியாக உள்ளார். மேற்படி 5 நபர்களுடன் சேர்ந்துதான் என் மனைவி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

2. பிரமாணபத்திரிக்கையில் மேற்படி விவரத்தை நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். மேற்படி எதிர்வழக்குரையில் மேற்படி 5 நபர்கள் தான் கையெழுத்து செய்தார்களா என்றால், மேற்படியார்களை தவிர ராணி மற்றும் வரதையன் மட்டும் கையொப்பம் செய்தார்கள். வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. விவரப்பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்களை தான் நான் நிரூபணஉறுதிகூற்றில் சொல்லியுள்ளேன்.

3. எவ் ஆவணங்களின் அடிப்படையில் பிரமாணபத்திரிக்கையில் வழக்கு விவரங்களை நாங்கள் கூறினோம் என்றால், கிரயம் பெற்ற ஆவணங்களை வைத்து கூறியுள்ளேன். எவ் ஆவணங்களின் அடிப்படையில் நாங்கள் சொத்தை கிரயம் பெற்றோம் என்றால், பி.டி.வரதைய்யன் மற்றும் பி.டி.நஞ்சையனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவர்கள் பாகம் செய்துகொண்டதில், நஞ்சையனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை நாங்கள் கிரயம் பெற்றோம். B.T.என்பதற்கு விரிவாக்கம் எனக்கு தெரியாது, அதைப்பற்றி நான் விசாரிக்கவும் இல்லை.

4. மேற்படி, 1,2 பிரதிவாதிகளான B.T.வரதைய்யன் மற்றும் B.T.நஞ்சையனின் தாத்தா, பாட்டி, அம்மா பெயர்களை கேட்டு தெரிந்துகொண்டேனா? என்றால், இல்லை. மேற்படியார்களின் தகப்பனார் பெயர்

B.T.திப்பேகவுடர் ஆகும். B.T.திப்பேகவுடருக்கு 2 மகன்கள், மகள்கள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் 6-ம் பிரதிவாதி ராணி நஞ்சையகவுடர் மற்றும் வரதையகவுடரின் தங்கையாவர். மேற்படி 6-ம் பிரதிவாதி நஞ்சையகவுடரும், வரதைய்யகவுடரும் ஏற்படுத்தியுள்ள பாகப்பிரிவினை ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களை பார்த்துதான் சொத்தை கிரயம் பெற்றோமா? என்றால், ஆமாம். மேற்படி ஆவணங்களை நான் என் தரப்பு ஆவணமாக நான் தாக்கல் செய்துள்ளேன்.

5. மேற்படி நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பாகக்கறார் ஆவணத்தில் ராணி கையொப்பம் செய்துள்ளாரா? என்றால், எனக்கு தெரியாது. எனது மனைவி தாக்கல் செய்து எதிர்வழக்குரையில் 3ம் பத்தியில் சொல்லியுள்ள விவரங்கள் உண்மையானதா? என்றால், சாட்சி எதிர்வழக்குரையை படித்து பார்த்து உண்மை என்று சாட்சியம் அளிக்கிறார்.

6. நான் எந்த ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், B.T.நஞ்சையனிடம் கிரயம் பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன். B.T.நஞ்சையன் யாரிடம் கிரயம் பெற்ற ஆவணம் என்றால், B.T.நஞ்சையன் அவரது சகோதரருடன் சேர்ந்து கொண்ட பாக ஆவணம் தான் அது, கிரயம் ஆவணம் அல்ல. என்னுடைய கிரய ஆவணத்தில் நஞ்சையனுக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்தை எனக்கு கிரயம் கொடுப்பதாக கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால், ஆமாம்.

7. தாவா சொத்துகள் கிரயம் பெறும் போது எங்கு வைத்து ஆவணம் எழுதப்பட்டது என்றால், சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. நான் சென்ற போது பத்திரத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் தான் எழுதினார்களா? என்றால், ஆமாம். கண்ணன் வெண்டார் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டு, சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

8. நாங்கள் கிரயம் பெற்ற அன்றே சொத்தை சுவாதீனம் எடுத்துக்கொண்டோமா என்றால், இல்லை. வாதி அவரது வழக்கறிஞரான ஜி.கே.வெற்றிவேலுவுடன் வந்து வழக்கு சொத்தை ரேவதியிடமிருந்து அபகரிக்க

நாங்கள் முற்படுவதாகவும், மேற்படியாரை அடித்ததாக பொய்யாக சொல்லி எங்கள் மீது பவானிசாகர் காவல்நிலையத்தில் 15.02.2015 ல் புகார் கொடுத்தார். அதன் அடிப்படையில் காவல்நிலையத்தார் எங்களை விசாரித்து சொத்தை சுவாதீனம் எடுக்ககூடாது என்று கூறினார்கள். ரேவதி மற்றும் அவரது பெற்றோர் மற்றும் சித்தப்பாவுடன் வந்து, நானும், 1,2 பிரதிவாதிகளும், ரேவதியை கற்பழிக்க முயன்றதாகவும், இன்ன பிற பொய்யான சங்கதிகளை மற்ற பிரதிவாதிகள் மீது குறிப்பிட்டும், எங்கள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். மேற்படி, புகாரின் அடிப்படையில், நாங்கள் கிரயம் பெற்ற சொத்தில் தற்போது வரை சுவாதீனத்திற்கு செல்லவில்லை. மேற்படி பூமியானது 12 ஏக்கர் ஆகும். எங்களது வீட்டை தொட்டார் போல் கிழபுறமாக அருகில் உள்ளது.

9. ரேவதியின் பூமியானது, எனது பூமியை ஒட்டி கிழபுறமாகவும், வடபுறமாகவும் அமைந்துள்ளது. ரேவதி பூமிக்கு தண்ணீர் வாய்க்கால் ஆனது எந்த பூமியிலிருந்து வருகிறது என்றால், அவரது பூமியில் சொந்தமான கிணறு உள்ளது அதிலிருந்து பயன்படுத்திக்கொள்கிறார்கள். நீதிமன்றத்தில் எனது மனைவி என்ன சாட்சி சொன்னார்கள் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால், தெரியாது. வழக்கு ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால், நீதிமன்றத்தில் உள்ளதால் நான் பார்க்கவில்லை.

10. எனது மனைவி சாட்சி சொல்லி ஒரு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால், வழக்கு தள்ளுபடியான விவரம் எனக்கு தெரியும். ஆனால் எதன் அடிப்படையில் மேற்படி வழக்கு தள்ளுபடியானது என்று எனக்கு தெரியாது. ஆனால் நான் மேல்முறையீடு செய்துவிட்டேன். தற்போது வரை மேற்படி வழக்கு எதற்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், தெரியாது.

11. நான் எதன் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், மனைவி என்ற அடிப்படையில் தான் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு நிலுவையில் பவர் பத்திரம் எழுதப்பட்டது என்றால், நீதிமன்ற வழக்கை நடத்துவதற்காக மட்டும் தான் மேற்படி பவர் பத்திரமானது எழுதப்பட்டது. மேற்படி பொது அதிகார ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேனா? என்றால், வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் அவர் தாக்கல் செய்துள்ளார். எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

12. மேற்படி ஆவணம் எங்குவைத்து எழுதப்பட்டது என்றால், சத்தியமங்கலத்தில் உள்ள கண்ணன் வெண்டார் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டு, சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் எதற்காக எழுதப்பட்டது என்றால், நான்இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக மேற்படி ஆவணம் எழுதப்பட்டது. இப்பிரமாணபத்திரிக்கையில் மேற்படி விவரத்தை குறிப்பிட்டுத்தான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், ஆமாம்.

13. நான் இந்நீதிமன்றத்தில் 2 வழக்கிலும் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது மனைவி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.55/2016-ல் 2 ம் பிரதிவாதி எதற்காக கட்சி சேர்க்கப்பட்டார் என்றால், மேற்படி வழக்கில் சுப்பையனை கட்சி சேர்க்கவில்லை. நான் எதிர்வழக்குரையில் என் மனைவி குறிப்பிட்டு சொல்லியுள்ள ஆவணங்களை தான் நான் எங்கள் தரப்பு ஆவணமாக இவ்வழக்கில் குறியீடு செய்துள்ளோமா என்றால், ஆமாம். அது தவிர வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

14. நான் ஒரு மத்திய அரசு ஊழியர் ஆவேன். மத்திய அரசு ஊழியராக இருக்கும் பட்சத்தில் ஒரு சொத்தை கிரயம் பெறும் போது நான் அரசிடம் முறையாக அனுமதி பெறவேண்டும் என்று சொன்னால், எனது பெயரில் சொத்துக்களை வாங்கினால் தான் அனுமதிபெற வேண்டும். எனது மனைவி அவரது பெயரில் முறையான வருமான வரி தாக்கல் செய்து அதன் அடிப்படையில் அவர் பெயரில் மேற்படி சொத்து வாங்கப்பட்டது. தாவாச்சொத்தை கிரயம் பெற்ற சமயத்தில் என் மனைவி தாக்கல் செய்த வருமானவரி கணக்கை இவ்வழக்கில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், நான் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

15. நான் உண்மையில் பெருந்தொகை கொடுத்து சொத்தை கிரயம் பெற்றிருந்தால், மேற்படி வருமான வரி விவரத்தை தாக்கல் செய்திருப்பேன்

என்றும், மேற்சொன்னவாறு உண்மையில் பெருந்தொகை கொடுத்துகிரயம் பெறாதா காரணத்தினால் தான் வருமானவரி செலுத்திய விவரங்களை தாக்கல் செய்ய நான் மறுக்கிறேன் என்றால், சரியல்ல. நான், மேற்படி சொத்தை கடன் வாங்கியிருப்பேன். அதுபொறுத்து வருமானத்துறையினர் மட்டும் தான் கேள்வி கேட்கவேண்டும்,நீதிமன்றத்தில் வாதி கேள்வி கேட்க இயலாது. நான் கடன் வாங்கி தான் சொத்தை வாங்கினேன் என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளோமா என்றால், இல்லை. எனது மனைவி தாக்கல் செய்த வழக்கிலும் சொல்லவில்லை. எனது மனைவி வாங்கிய பூமி செல்லும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்னுடைய பூமி எங்களுக்கு வேண்டுமென்று வழக்கு போட்டுள்ளோம்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி வழக்கானது குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(Sd)Tmt.P.Sharmila, B.B.A., B.L.,
District Munsif,
Sathyamangalam.